**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 193/2024 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | கரிகாலன் |
| Father Name | : | குப்பண்ணன் |
| Village | : | பழையக்கோட்டை |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 56 |

Accused absent. 317 petition filed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது பழையக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 28.04.2024 ஆம் தேதியன்று மாலை 7.00 மணியளவில் ஈரோடு – காங்கேயம் ரோட்டில் உள்ள EBET கல்லூரி அருகே மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி அப்புக்குட்டி வாகனத்தை ஓட்ட எனது அண்ணன் பின்னால் அமர்ந்து இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும்போது அதே திசையில் சென்ற மாருதி 800 கார் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக எனக்கு எனது தம்பி செல்வம் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னார். அந்த விபத்தில் எனது அண்ணனுக்கு கால், மற்றும் தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. அப்புக்குட்டிக்கு எங்கு அடிபட்டது என்று எனக்கு தெரியாது பின்னர் எனது அண்ணன் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக கூறினார்கள். அப்புக்குட்டி வேறு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றதாக கூறினார்கள். பின்னர் எனது அண்ணனை மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கு சிகிச்சையில் இருந்த எனது அண்ணன் 01.05.2024 ஆம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்னர் காங்கேயம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடைதுதான். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார் என்றால் எனது உறவினரான தங்கையின் கணவர் எழுதிக்கொடுத்தார். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து எப்படி நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி அவரது வாகனத்தில் சாலையின் விதிகளை பின்பற்றி மெதுவாக சென்றுகொண்டிருந்தார் என்றும், விபத்திற்கு காரணம் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர்தான் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.27 18:10:51 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 193/2024 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | காந்திமதி |
| Husband Name | : | தமிழரசு |
| Village | : | பழையக்கோட்டை |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 47 |

Accused absent. 317 petition filed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது பழையக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்த தமிழரசு எனது கணவர் ஆவார். கடந்த 28.04.2024 ஆம் தேதியன்று மாலை 7.00 மணியளவில் ஈரோடு – காங்கேயம் ரோட்டில் உள்ள EBET கல்லூரி அருகே மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி அப்புக்குட்டி வாகனத்தை ஓட்ட எனது கணவர் பின்னால் அமர்ந்து இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும்போது அதே திசையில் சென்ற மாருதி 800 கார் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக எனக்கு புருசோத்தம்மன் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னார். அந்த விபத்தில் எனது கணவருக்கு கால், மற்றும் தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. அப்புக்குட்டிக்கு கால் மற்றும் தலையில் அடிபட்டு லோட்டஸ் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கூறினார்கள். பின்னர் எனது கணவரை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக கூறினார்கள். பின்னர் எனது கணவர் மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கு சிகிச்சையில் இருந்த எனது கணவர் 01.05.2024 ஆம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பின்னர் எனது கணவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையின்போது சாட்சியாக உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து எப்படி நடைபெற்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் புகார் கொடுக்க செல்லவில்லை என்றால் சரிதான். நான்கு நாட்கள் கழித்துதான் எனது கணவர் இறந்தார் என்றால் சரியல்ல. எதிரி அவரது வாகனத்தில் சாலையின் விதிகளை பின்பற்றி மெதுவாக சென்றுகொண்டிருந்தார் என்றும், விபத்திற்கு காரணம் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர்தான் என்றால் நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.27 18:11:01 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 193/2024 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | அப்புக்குட்டி |
| Father Name | : | குழந்தைசாமி |
| Village | : | நத்தக்காடையூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 51 |

**Accused absent. 317 petition filed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது பழையக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 28.04.2024 ஆம் தேதியன்று மாலை 7.00 மணியளவில் ஈரோடு – காங்கேயம் ரோட்டில் உள்ள EBET கல்லூரி அருகே மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி நான் வாகனத்தை ஓட்ட எனக்கு பின்னால் தமிழரசு அமர்ந்துகொண்டும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும்போது அதே திசையில் சென்ற மாருதி 800 கார் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அந்த விபத்தில் எனக்கு கால், மற்றும் தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. தமிழரசுக்கு கால், மற்றும் தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. நான் லோட்டஸ் மருத்துவமனைக்கு சென்று ஒருவாரன் சிகிச்சையில் இருந்தேன். பின்னர் தமிழரசை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக கூறினார்கள். அங்கு சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாதக தகவல் கேட்டு தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ சமயம் சம்பவ இடத்திற்கு என்ன வேலையாக சென்றேன் என்றால் எனது தங்கையின் வீட்டிற்கு செல்லவேண்டி சென்றேன். சம்பவ சாலையானது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய வாகனம் எவ்வாறு வந்தது என்றால் எங்களுக்கு பின்னால் வந்து எங்கள் மீது

மோதிவிட்டது. குறுக்கு ரோட்டில் இருந்து மெயின்ரோட்டிற்கு செல்லவேண்டும் என்றால் கிழக்கு மற்றும் மேற்கு வாகனம் வருவதை பார்த்து செல்லவேண்டும் என்றால் சரிதான். நான் இண்டிகேட்டர் போட்டு சென்றேன் என்றால் சரிதான். இண்டிகேட்டர் போட்டிருந்தால் பின்பக்கம் வரும் வாகத்திற்கும் எதிரில் வரும் வாகனத்தை தெரியும் என்றால் சரிதான். இருச்சக்கரவாகனத்தை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி ஓட்டிச் சென்று வலிய விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.27 18:11:14 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 193/2024 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | செல்வராஜ் |
| Husband Name | : | பழனியப்பன் |
| Village | : | நத்தக்காடையூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 45 |

Accused absent. 317 petition filed.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது நத்தக்கடையூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 28.04.2024 ஆம் தேதியன்று மாலை 7.00 மணியளவில் ஈரோடு – காங்கேயம் ரோட்டில் உள்ள EBET கல்லூரி அருகே மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி அப்புக்குட்டி வாகனத்தை ஓட்ட அவருக்கு பின்னால் தமிழரசு அமர்ந்துகொண்டும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும்போது ரோட்டைக்கடக்கும்போது அதே திசையில் சென்ற மாருதி 800 கார் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. அந்த விபத்தில் அப்புக்குட்டிக்கு கால், மற்றும் தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. தமிழரசுக்கு கால், மற்றும் தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. அப்புக்குட்டி லோட்டஸ் மருத்துவமனைக்கு சென்று ஒருவாரம் சிகிச்சையில் இருந்தார். பின்னர் தமிழரசை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக கூறினார்கள். அங்கு சிகிச்சையில் இருந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாதக தகவல் கேட்டு தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியை அடையாளம் காட்ட வேண்டி முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.27 18:11:27 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்